## August 15, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அரிய வகை புவி தனிமங்கள்-காந்தங்களின் ஏற்றுமதிக்கு சீனா விதித்துள்ள கட்டுப்பாடுகள் குறித்து அந்நாட்டுடன் இந்தியா பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.
   i. சீனாவில் இருந்து 7 அரிய புவி தனிமங்கள் மற்றும் தொடர்புடைய காந்தங்கள் ஏற்றுமதிக்கு சிறப்பு ஏற்றுமதி உரிமங்களைக் கட்டாயமாக்கி, கடந்த ஏப்ரலில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.
   ii. பயணிகள் வாகனங்கள் தயாரிப்பு உள்பட பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படும் இந்த புவி தனிமங்கள்-காந்தங்களுக்கு சீன இறக்குமதியையே இந்தியா சார்ந்துள்ளது.
   iii. சீனாவில் இருந்து இப்பொருள்களின் இறக்குமதியை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு, மத்திய அரசுக்கு இந்திய வாகன தயாரிப்பு தொழில் துறையினர் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மின்சார மோட்டார், பிரேக்கிங் அமைப்புமுறை, அறிதிறன் பேசி, ஏவுகணை தயாரிப்பில் இவை முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது.
   iv. இந்தியாவில் அதிக தேவையுள்ள உரங்களில் ஒன்றான டிஏபி-யும் (டை அமோனியம் பாஸ்பேட்) சீனாவில் இருந்தே பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த உர ஏற்றுமதிக்கும் சீனா கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. சீனாவின் இந்த நடவடிக்கைகள், இந்தியாவுக்கு எதிரான வியூகமாகப் பார்க்கப்படுகிறது.
2. உலக தடகள சாம்பியன்ஷிப்பில் பங்கேற்கவுள்ள வீராங்கனைகள் 'எஸ்ஆர்ஒய்' என்ற மரபணு பரிசோதனை மேற்கொள்வதை, இந்திய தடகள சம்மேளனம் கட்டாயமாக்கியுள்ளது. ஒரு நபரின் பிறவிப் பாலினத்தைக் கண்டறிவதற்கு இந்த 'எஸ்ஆர்ஒய்' பரிசோதனை உதவுகிறது.
   i. ஆணாக பருவவயதை அடைந்து, பிறகு பெண்ணாக மாறியவர்கள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்க உலக தடகள அமைப்பு தடை விதித்துள்ளது. பிறவியில் ஆணாக இருந்து, பின்னர் பெண்ணாக மாறியோர் மகளிர் பிரிவில் பங்கேற்கும்போது, உடல் ரீதியாக அவர்களுக்கு இயல்பாகவே சாதகமான நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது.
   ii. டோக்கியோவில் செப்டம்பரில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்ஷிப்பில் மகளிர் பிரிவில் பங்கேற்க விரும்புவோர் 'எஸ்ஆர்ஒய்' பரிசோதனை மேற்கொள்வது கட்டாயம் என அதுதொடர்பான அறிவுறுத்தலை இந்திய தடகள சம்மேளனம், உலக தடகள அமைப்பு கடந்த மாதம் அறிவித்தது.
   iii. இந்நிலையில், அதுதொடர்பான அறிவுறுத்தலை இந்திய தடகள சம்மேளனம் மாநிலச் சங்கங்களுக்கு அனுப்பியுள்ளது.
   iv. தற்போதைய நிலையில், உலக சாம்பியன்ஷிப்பில் பங்கேற்க பாருல் செளதரி (3,000 மீ ஸ்டீபிள்சேஸ்) தகுதி பெற்றிருக்கும் நிலையில், அன்னு ராணி (ஈட்டி எறிதல்) தரவரிசை அடிப்படையில் அந்த வாய்ப்பைப் பெறும் நிலையில் உள்ளார்.

3. *1972 மியுனிக் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற இந்திய ஹாக்கி அணியைச் சேர்ந்த வெஸ் பயஸ் (80), முதுமை காரணமான உடல்நலக்குறைவால் வியாழக்கிழமை கால மானார்.*
4. *ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை பகுதியில் புதிய யூதக் குடியிருப்புகளை அமைக்கவிருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.*
    i. *இதன் விளைவாக மேற்குக் கரை பகுதியும் கிழக்கு ஜெருசலேம் பகுதியும் இரண்டு நிலப்பரப்புகளாகப் பிரிக்கப்படும். இது, இஸ்ரேலும் பாலஸ்தீனமும் தனித் தனி சுதந்திர நாடுகளாகச் செயல்படும் 'இரட்டை தேசத்' தீர்வை எட்டுவதில் மேலும் சிக்கலை ஏற்படுத்தும் என்று மனித உரிமை அமைப்புகள் அச்சம் தெரிவித்துள்ளன.*
5. *அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் தங்குவதற்கு வீடில்லாமல் நடைபாதைகள், பொது இடங்களில் வசிப்போரை வறியோர் காப்பகங்களுக்கோ, சிறைக்கோ அனுப்ப அந்த நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சியான குடியரசுக் கட்சியைச் சேர்ந்த மியூரியல் பவுசர் மேயராக பதவி வகிக்கும் வாஷிங்டனில் நாளுக்குநாள் குற்றங்கள் அதிகரித்து வருவதாக டிரம்ப் குற்றஞ்சாட்டி வருகிறார். இதனை மேயர் பவுசர் மறுத்து வரும் சூழலில், அந்த நகரில் குற்ற அவசரநிலையை டிரம்ப் அறிவித்தார்.*
6. *ஆர்ஜென்டீனாவில் பாக்டீரியா மாசு கலந்தபின் மருந்தை சிகிச்சைக்காக பயன்படுத்தி வந்ததில் கடந்த மே மாதம் முதல் இதுவரை 96 நோயாளிகள் இறந்ததாக தகவல் வெளியாகியுள்ளது*
7. *நைஜீரியாவுக்கு 34.6 கோடி டாலர் (ரூ.3,190 கோடி) மதிப்பிலான ஆயுதங்களை விற்பனை செய்ய அமெரிக்க அரசு அனுமதி அளித்துள்ளது.*
8. *இந்தியாவின் சமையல் எண்ணெய் இறக்குமதி கடந்த ஜூலை மாதத்தில் 16 சதவீதம் குறைந்து 15.48 லட்சம் டன்னாக உள்ளது. இது குறித்து இந்திய எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் (எஸ்இஏ) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:*
    i. *இந்தியாவில் சமையல் எண்ணெய் தேவையில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக இறக்குமதி மூலம் பூர்த்தி செய்யப்படுகிறது. இந்தோனேசியா, மலேசியாவிலிருந்து பாமாயில், ஆர்ஜென்டீனா, பிரேசிலில் இருந்து சோயா எண்ணெய், ரஷியா, உக்ரைன், ஆர்ஜென்டீனாவில் இருந்து சூரியகாந்தி எண்ணெய் ஆகியவை இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*
9. *இந்தியாவுடன் நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்குவது குறித்து பேச்சு நடத்தி வருவதாக சீனா தெரிவித்துள்ளது.*
    i. *பிரதமர் மோடி ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாட்டில் பங்கேற்க இம்மாத இறுதியில் சீனா செல்கிறார். அப்போது, இருநாடுகள் இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்கும் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.*